REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 21உ செவ்வாய் (6—9—55) ★ ★ வெளியீடு: ஆவணி 22உ புதன் (7—9—55) [இதழ் 72

எண்ணெய், இயற்கை வாயு கண்டுபிடிப்பு

ரூ. 20 கோடி செலவில் ஏற்பாடு?

இந்திய சர்க்காரின் இயற்கை வள இலாகா, எண்ணெய், மற்றும் இயற்கை வாயு கண்டுபிடிப்புக்காக, புதிய பிரிவு ஒன்றை அமைத்திருப்பதுடன், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே, காடெங்கும் இவை தேடும் வேலைக்காகச் சமார் ரூ 20 கோடி செலவிடவும் உத்தேசித்துள்ளது என்று நம்பகமாகத் தெரியவருகிறது.

கண்டுபிடிப்பு வேலை—வெளி நாட்டு நிபுணர்கள், இயந்திர சாதனங்கள் உதவியுடன் மேற்கொள்ளப்படும் என்று கூறப்படுகிறது. இந்தப் புதிய இலாகா பிரிவின் தலைமை நிலையம் கல்கத்தாவில் இருக்குமாம்.

காங். தீர்மானத்திற்கு கடும் எதிர்ப்பு

ஆச்சாரியார் எதிர்ப்பு 'முட்டாள்தனமானது'

'அவரது குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை'

தவருன பிரச்சாரத்திற்காக ஆச்சாரியார்மீது நடவடிக்கை?

பி. சி. ஜி. நிலை பற்றி மத்திய மந்திரி அமிர்த கௌரி

புதுடில்லி, செப். 5—

"காசநோய் தடுப்புக்காக பி. சி. ஜி. ஊசி குத்துவதை எதிர்த்து நடைபெறும் இயக்கம், முட்டாள்தனமானது;

"பி. சி. ஜி. ஊசியின் தீய விளைவுகள்—என்று, ஆச்சாரியார் குறிப்பிட்டுள்ள சம்பவங்கள் குறித்து, விசாரணை செய்யப்பட்டபோது, 'அவை அத்தனையும் தவறானவை' என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது;

"பி. சி. ஜி. பற்றி, 'டாக்டர்'கள் தங்கள் கருத்தை அறிவிக்க முடியாமல், சர்க்காரால் நிர்ப்பந்தப்படுத்தப்படுகிருர்கள்—அச்சுறுத்தப்படுகிருர்கள்—என்ற ஆச்சாரியாரின் கூற்று, கிஞ்சிற்றும் ஆதாரமற்றது,"

என்று, ராஜ்யங்கள் சபையில், சுகாதார மந்திரி ராஜகுமாரி அமிர்த கௌரி, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிருர்.

மேலும், பல உபகேள்விகளுக்கு பதிலளிக்கையில் மந்திரி குறிப்பிட்டதாவது:—

"பி. சி. ஜி. ஊசி குத்துவது பற்றி, கருத்து எதும் தெரிவிக்கக் கூடாது—என்று, டாக்டர்களுக்கு, சர்க்கார் சுற்றறிக்கை எதும் அனுப்பவில்லை.

"ரஷ்யாவில், எல்லாக் குழந்தைகளுக்கும், மூன்று வயதாயிருக்கும்போது கட்டாயமாக இந்த ஊசி குத்தப்படுகிறது; இரண்டாவது முறையாக, குழந்தைகளுக்கு 5 வயதாகும்போது இந்த ஊசி குத்தப்படுகிறது; தேவையான எல்லா முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன."

'பி. சி. ஜி. ஊசி குத்துவதினுல், காசநோய் ஏற்படவும் வழி உண்டு' என்று பிரிட்டிஷ் மருத்துவ சஞ்சிகையில் வெளிவந்துள்ள கட்டுரை பற்றிக் கேட்கப்பட்டபோது, மந்திரி அமிர்த கௌரி குறிப்பிட்டுள்ளதாவது:—

"நான் அந்தக் கட்டுரையையும் படித்தேன்; பிரிட்டிஷ் சுகாதார இலாகாவிலிருந்து எனக்குக் கடைசியாக வந்துள்ள கடிதப்படி, இங்கிலாந்தில் எல்லாக் குழந்தைகளுக்கும் ஐந்து வயதாயிருக்கும்போது, இந்த ஊசி கட்டாயமாகக் குத்தப்படுகிறது.

"'பி. சி. ஜி. தீங்கற்றது'—என்று, ஆச்சாரியாருக்குப் பதில் தரும்வகையில், சர்க்கார் அறிக்கை விடுத்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, 'பி. சி. ஜி. நல்லது—அவசியமானது' என்று, ஏன், சர்க்கார் பகிரங்கமாகத் தெரிவிக்கக் கூடாது?" என்று, கேட்கப்பட்டபோது, 'நாம், அம்மாதிரி ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம்,' என்று மந்திரி பதில் தந்திருக்கிருர்.

"தவருன பிரச்சாரத்தில் ஈடுபட்டிருப்பதாக, ஆச்சாரியார் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது?"

என்று, கேட்கப்பட்டதற்கு மந்திரி பதில் எதும் தரவில்லை.

4½ கோடி ரூபாய் சேதம்!

3,558 கால் நடைகள் பலி

அசாமில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால், இவ்வாண்டில் மொத்தம் ரூ. 4½ கோடிக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாம்; 3,558 கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனவாம்.

'அதன் கொள்கையை தேசீயக் கொள்கையாக ஏற்கமாட்டோம்'

'கோவா மக்கள் கைவிடப்பட்டதாக எண்ணுவர்'

காங்கிரசின் கோவா போராட்டக் கொள்கையை எதிர்த்து பல கட்சித் தலைவர்கள் அறிக்கை

புதுடில்லி, செப். 5—

"கோவா பிரச்சினையை நாங்கள் ஒரு தேசீயப் பிரச்சினையாகக் கருதி அதன் அடிப்படையிலேயே செயல்பட்டு வந்திருக்கிறோம்;

"இப்போது காங்கிரஸ், 'கோவா எல்லைக்குள் இந்தியர்கள் நுழையக் கூடாது,' என்று தீர்மானித்திருக்கிறது;

"தன்னுடைய இந்தக் கொள்கையை, 'தேசீயக் கொள்கை' என்று காங்கிரஸ் ஒருபட்சமாக அறிவித்திருப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது;

"அகில இந்தியக் காங்கிரசின் தீர்மானம் நாட்டு மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கிறது;

"எல்லாக் கட்சிகளும் ஒன்றுகச் சேர்ந்து, தேசீய அடிப்படையில், கோவா விடுதலை இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கும்போது, இதர அரசியல் கட்சிகளுடன் எந்தவித ஆலோசனையும் செய்யாமல், தனித்து நின்று, ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சி, 'ஐக்கிய முன்னணி'யை விழ்த்தி ஒழித்துக்கட்ட முனைவது வருந்தத்தக்க ஒன்றுகும்.

"சுதந்திர தினத்தன்று, 'சத்தியாக்கிரகி'கள் கோவாவிற்குள் நுழைந்தபோது, பிரதமர் நேரு, பகிரங்கமாகவே அவர்களுக்கு தனது நல்லாசியைக் கூறினுர்; பயங்கரமான படுகொலை கோவாவில் நடைபெற்றபோது, துப்பாக்கிக் குண்டுகளால் உயிரிழந்த—காயம்பட்ட வீரர்களின் நாட்டுப் பற்றையும், தீரத்தையும் பண்டித நேரு பாராட்டியிருக்கிருர்;

"எனவே, 'போர்ச்சுகீசிய காலனி ஆதிக்கக் கோட்டையைத் தகர்த்தெறிவேன்,' என்று பண்டித நேரு அறிவித்திருந்ததற்கு நேர் எதிராக, அகில இந்திய காங்கிரஸ், தீர்மானம் நிறைவேற்றியிருப்பது வருந்தத்தக்க ஒன்றுகும்;

"'பாசிச சர்வாதிகார ஆட்சி'க்கு எதிராகப் போரிட்டுக்கொண்டிருக்கிற கோவா மக்கள், ஆளும் கட்சியான காங்கிரசின் இந்தத் தீர்மானத்தால் தாங்கள் கைவிடப்பட்டுவிட்டதாக எண்ண வழி ஏற்படும் என்பதும், இந்தத் தீர்மானத்தின் மிகக் குழப்பம் தரும் அம்சமாகும்;

"எனவே, கோவா தேசீயக் காங்கிரஸ், 'கோவா விமோசன சமிதி' ஆகியவை உடனடியாக தங்கள் செயற் குழுக்களைக் கூட்டி, காங்கிரஸ் தீர்மானம் குறித்தும், எதிர்கால நடவடிக்கை குறித்தும் விவாதிக்க வேண்டும்."

—இவ்வாறு, ம. சோ. கட்சி, இந்துமகா சபை, கம்யூனிஸ்டு கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த பதினேரு தலைவர்கள் (10 மக்கள் சபை உறுப்பினர்கள் உட்பட) வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

தண்ணீர் பஞ்சத்தால் வாடிய ஒரிசா!

வெள்ளக் கொடுமைக்கு இலக்காகிவிட்டது!

இரு ஆண்டுகளாக தண்ணீர்ப் பஞ்சத்தால் வாடிய ஒரிசா மாநிலம் இன்று வெள்ளக் கொடுமையால் ஒடுங்கிக் கிடக்கிறது.

அப்பகுதியிலுள்ள எட்டு முக்கிய நதிகளில் நான்கில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதாம்; சில இடங்களில் கரைகள் உடைப்பட்டு விட்டனவாம்.

வெள்ளம் அங்கே! வறட்சி இங்கே!

வட பீகாரில் வெள்ளக் கொடுமை அதிகமாக இருக்கும்போது, தென் பீகாரில் தொடர்ந்தாற்போல் வறட்சி நிலவுகிறதாம்; பல மாவட்டங்களில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளவையாம்.

மத்திய பிரதேசத்தில் உள்ள நேப்பா பத்திரிகைக் காகித உற்பத்திசாலையில், இப்பொழுது பரீட்சார்த்த உற்பத்தி வேலை நடைபெற்றுவருகிறது. இங்கு நாள் ஒன்றுக்குச் சராசரி 15 டன் வர்ணம் நீக்கிய பத்திரிகைக் காகிதம் உற்பத்தி செய்யப்பட்டுவரும்.

காங்கிரஸ் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது

இரண்டாம் திட்டம் பெரிதாக்கப்படமாட்டாது?

புதுடில்லி, செப். 5—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இப்போதைய மதிப்பீட்டு அளவான ரூ. 4,300 கோடியை இன்னும் அதிகரிக்கவேண்டுமென்றும், அதன் மூலம், ஏற்கனவே அறிவித்திருந்தபடி சுமார் 1 கோடி பேருக்கும் அதிகமாக வேலை தேடித் தரவேண்டுமென்றும், கடந்த கிழமை இறுதியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கோரியிருந்ததை, இன்று நடைபெற்ற தேசீய அபிவிருத்திக் குழுக் கூட்டம் நிராகரித்திருக்கிறது.

கடன் வாங்குவது, வரி விதிப்பது போன்றவைகளால், இப்போதைய அளவுக்கே பணம் திரட்டுவது கடுமையாயிருக்கும் என்றும், எனவே, மேலும் திட்டத்தைப் பெரிதாக்கினுல் நிறைவேற்றுவது இயலாததாகிவிடும் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் காரணங்களால், திட்டத்தின் அளவு பெரிதாக்கப்படவேண்டும் என்ற காங்கிரஸ் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கென தனி இலாகா!

புதுடில்லி, செப். 5—

தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களின் நலன்களைக் கவனிப்பதற்கென தனி இலாகாக்களை நிறுவ வேண்டும் என்று எல்லா மாநில சர்க்கார்களையும் மத்திய சர்க்கார் கேட்டுக்கொண்டிருப்பதாக உதவி உள்நாட்டு மந்திரி பி. என். தத்தார் ராஜ்யங்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

மக்களில் எல்லாப் பிரிவினரும், 'சமூக சேவகர்'களும், தாழ்த்தப்பட்டவர்களும்கூட, தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக சர்க்கார் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தங்களின் ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிருர், அந்த உதவி மந்திரி.

செப்டம்பர் 17–23: நாட்டுப் பிரிவினை வாரம்

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 6—9—'55 செவ்வாய்

பிணங்கள் பேசுமானால்...!

போர்ச்சுகீசிய ஆட்சிக்குட்பட்டிருக்கின்ற கோவா எனும் சிறிய திட்டின் விடுதலைக் கிளர்ச்சி சூடுபிடித்துப் பெருந்தீயாகப் பற்றி எரிந்துகொண்டு இருக்கிறது. இந்தச் சூழ்நிலையை உருவாக்கி வளர்த்து வருகிறவர்கள் காங்கிரஸ் நீங்கலாக மற்ற அரசியல் கட்சிக்காரர்களேயாவர்.

கோவா விடுதலையை முதலாகக் கொண்டு அரசியல் துறையில் எங்கு தங்கள் செல்வாக்கை மற்ற அரசியல் கட்சிகள் பெருக்கிக் கொள்ளுகின்றனவோ என்ற பேரச்சம் பொதுவாக காங்கிரஸ் கட்சிக்கும், குறிப்பாக நேரு பண்டிதருக்கும் ஏற்பட்டுவிட்டது. அத்தகு ஒரு வாய்ப்பை மற்ற அரசியல் கட்சிகளுக்கு விட்டுவிடக் கூடாது என்ற உள்ளெண்ணத்துடன், வேறு வழியற்ற நிலையில் கோவா விடுதலைக் கிளர்ச்சிக்குப் பண்டிதரும் வேண்டா வெறுப்பாக உடன்பட வேண்டியதாகிவிட்டது.

தாம் ஆணை இட்டால், கோவாவை விடுவிப்பதற்காகக் கிளர்ச்சி துவங்கப்பட வேண்டுமானால் துவங்கப்பட்டும், நிறுத்தப்பட வேண்டுமெனக் கூறினால் நிறுத்தப்பட்டும் போய்விடும் எனப் பண்டிதர் மனப்பால் குடித்திருந்தார். இதன் மூலம், 'இந்தியாவே நேரு—நேருவே இந்தியா' என்ற ஒரு கருத்தை உலகத்தவர் நினைப்பில் உரங்கொள்ளச் செய்துவிட வேண்டுமென்பதும் பண்டிதரின் பேரவா. பண்டிதர் போன்ற அரசியல் தலைவர்களுக்கு, இத்தகைய மனப்பாங்கு அமைந்திருப்பதிலும் ஆச்சரியப்படத்தக்கது ஒன்றுமில்லை.

பண்டிதரின் ஆணை வழிதான் ஆரம்பித்திருக்கிறது எனத் துவக்கத்தில் உலகத்தவருக்குக் காணப்பட்ட கோவா போராட்டம், பண்டிதரின் கருத்துப்படி நிறுத்தப்படுவதாகக் காணோம். பண்டிதரின் சொல்லை மீறி போராட்டம் நடைபெறுவதிலேயே இருந்து வருகிறது.

கோவா போராட்டத்தின் மூலம், தனித்த முறையில் தாம் ஒரு புதிய 'அந்தஸ்தை'ப் பெற்றுவிட முடியும் என்ற பண்டிதரின் நினைப்பு பாழாகிவிட்டது. அதற்கு மாறாக, பண்டிதருக்குள்ள அந்தஸ்தின் நிலையாமையை கோவா போராட்டம் அம்பலமாக்கிக் காட்டுவதில் வந்து நிற்கிறது.

அகில இந்திய காங்கிரசின் முரண்படும் போக்கும், பண்டிதரின் முரண்படும் செய்கையும், மேற்குறித்த உண்மைகளைத்தான் எடுத்துக்காட்டுகின்றன. பரிதாபத்துக்குரிய பண்டிதருக்கு நமது அனுதாபம் உரித்தாகட்டும்.

'கோவாவை விடுவிக்கும் போராட்டத்தில் காங்கிரஸ் கூட்டாகக் கலந்துகொள்ளக் கூடாது-காங்கிரஸ் கட்சியினர் தனி நபர்கள் என்ற முறையில் கலந்துகொள்ளலாம் எனத் தீர்மானித்தது, செயற் குழு அத்தீர்மானத்திற்கு ஊற்றுக்காலாக இருந்த பண்டிதர், தனித்த முறையில் கோவா போராட்டத்தில் கலந்து கொண்ட காங்கிரஸ் கட்சியினரைப் பாராட்டவும் செய்தார்—வாழ்த்தி வழியனுப்பவும் செய்தார். அத்துடன், பொதுவாக, கோவா போராட்டத்தைப் பாராட்டி வரவேற்று விளக்கமும் கூறினார், பண்டிதர்.

ஏறத்தாழ இரண்டாண்டிற்கு முன்பு கோவாவை விடுவிக்க, மற்ற அரசியல் கட்சியினர் இந்திய எல்லையிலிருந்து கோவா எல்லைக்குள் நுழைய முயன்றனர்; அந்த முயற்சியை உண்மையாகக் கண்டித்ததுடன் கோவாவிற்குள் நுழைய முயற்சித்த இந்தியக் குடிமக்களையும் அடித்து விரட்ட ஏற்பாடும் செய்யப்பட்டது, பண்டித நேரு அரசாங்கத்தால்!

'வேற்று அரசின் ஆதிக்கத்தில் இருக்கிற கோவாவிற்குள், அந்த அரசாங்கத்தின் அனுமதி பெறுமல் தனது குடிமக்களை நுழைய விடுவது, சர்வதேச நடைமுறைக்கு மாறுபட்டது' என இந்தியப் பேரரசு கருதியதனாலேயே, இரு ஆண்டுகட்கு முன்னர், மற்ற அரசியல் கட்சிகள் எடுத்துக் கொண்ட முயற்சியைத் தடுத்து நிறுத்தினார் இந்தியப் பிரதமர் பண்டித நேரு. அதே சர்வதேச நடைமுறை இன்றும் செயலளவில் இருக்கும் நிலையிலேயே, பண்டிதர், கோவா விடுதலைக் கிளர்ச்சிக்கு ஊக்கமூட்டி இருக்கிறார். 'விந்தை மனிதரின் வேடிக்கையான செயல்' என, இது கண்டு உலகம் எள்ளி நகையாடத்தான் செய்யும்!

பண்டிதரின் உற்சாகமூட்டும் உரையைக் கேட்டு இந்தியக் குடிமக்கள் கோவாவிற்குள் கூட்டம் கூட்டமாக நுழையத் தலைப்பட்டனர். ஆகஸ்ட் பதினைந்தாம் நாள், கோவாவிற்குள் நுழைந்த இந்தியக் குடிமக்களை, கோவாவில் இருக்கும் போர்ச்சுகீசிய ஆதிக்க வெறியர்கள் சுட்டுக் கொல்லவும் துணிந்து விட்டனர்.

துப்பாக்கி ஏந்தியவர்கள் செய்யத் துணியும் மிருகச் செயலை கோவா அதிகார வெறியர்களும் செய்துகாட்டினர். இந்தியக் குடிமக்களின் விலைமதிக்க ஒண்ணாத உயிர் இருபது ஒழிந்துபோய்விட்டன.

அவர்களுடைய இறப்பிற்கு, கோவா அதிகார வெறியர்களே பொறுப்பேற்க வேண்டியவர்களாவர்; ஆனால், அந்தப் பொறுப்பு அவர்கள் அளவுடன் நின்றுவிடுவதல்ல; அவர்கள் கொல்லப்பட்டதற்கு, இந்தியப் பிரதமர் பண்டித நேருவும் பொறுப்பேற்க வேண்டியவரேயாவார். பண்டிதர் மீதுள்ள பாசத்தின் காரணமாக, அதை மறைப்பதும், மறப்பதும் உண்மைக்குச் சமாதி கட்டுவதாகவே முடியும்.

இவ்வளவிற்குப் பிறகு கூடிய அகில இந்திய காங்கிரஸ் குழு, பின்வருமாறு தீர்மானித்திருக்கிறது:—

'இந்தியர்கள், கோவா எல்லைக்குள் நுழைவது தவறான செய்கையாகும்'

'தனிப்பட்டவர்கள் 'சத்தியாக்கிரகம்' செய்வதுகூட தவிர்க்கப்பட வேண்டும்.'

'பெருவாரியான மக்கள் கோவாவிற்குள் 'சத்தியாக்கிரகம்' என்ற பெயரால் நுழைவது, விரும்பத் தகாத ஒன்றாகும்.'

'கோவா பிரச்சினையை இந்தியாவின், தேசீய, அகில உலகக் கண்ணோட்டத்துடன் மக்கள் கவனிக்க வேண்டுமேயல்லாது, ஒரு கட்சி நோக்கு அடிப்படையில் அல்ல; இதில் எல்லோரும் இந்திய சர்க்காரின் கொள்கையை ஆதரிக்க வேண்டும்.'

இப்பொழுது நிறைவேற்றி உள்ள இதே தீர்மானத்தை, சென்ற ஜுலை இருபத்திமூன்றிலேயே காங்கிரஸ் செயற் குழு திட்டவட்டமாகத் தீர்மானித்திருந்தால், கோவா விடுதலையின் பெயரினால், வீணாக இழந்த உயிர்கள் இருபதையும் இந்தியா இழக்கத் தேவையே ஏற்பட்டிருக்காது.

அந்த இருபது உயிர்களும் கோவா விடுதலைக்காகப் பலியாயிற்று, அல்லது இந்தியப் பிரதமர் பண்டிதரின் கண்மூடி அவசரப் போக்கிற்குப் பலியாயிற்று எனக் கேட்பதும் இன்றியமையாததாகிறது.

கோவாவில் நுழைந்த அறப்போர் வீரர்களை வாழ்த்திய இந்தியப் பிரதமரின் மனமும், நாவும்தான், கோவா போராட்டம் **'தவறான கொள்கை—தவிர்க்கப்பட வேண்டும்—விரும்பத்தகாதது—விடுதலை முயற்சிகளை வலுவிழக்கச் செய்யக்கூடியது'** எனப் பேசவும் துணிகிறது.

இந்தியப் பிரதமர் பண்டிதரின் சொல்லும் செயலும், எதுவானாலும், எதுபற்றியதானாலும், எத்தகையதானாலும், அவைகளுக்கு 'ஆமாம்—ஆமாம்' என ஒத்து ஊதாமல், அவைகளில் அடங்கியுள்ள நன்மை தீமைகளை எடுத்துக் காட்டி, பண்டிதரைத் திருத்தும் பெரும்பணியினை தேசிய ஏடுகள் மேற்கொள்ளுமானால், பண்டிதரின் போக்கில் இத்தகு பயங்கரமான மேடு பள்ளங்கள் ஒருக்காலும் இருக்க முடியாது. நாட்டு மக்கள் நலனைவிட சொந்த இன நலமல்லவா நமது தேசிய ஏடுகளின் நெஞ்சை எப்பொழுதும் அரித்துக்கொண்டிருக்கின்றன! அந்தப் பிடிப்பில் உள்ள தேசிய ஏடுகளிடமா நாட்டு மக்கள் நலம் பெறும் போக்கினை எதிர்பார்க்க முடியும்?

குருடனுக்குக் குருடன் வழி காட்டுவது என்பதற்குக் காங்கிரஸ் செயல் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்!

'தமிழ்க் கலை தனித்தன்மை வாய்ந்தது!'

'இந்தோ-ஆரிய மொழிகள் பற்றிய கணிதம் திராவிட மொழிகளுக்குப் பொருந்தமாட்டா'

'சுதந்திர இலக்கிய வளம் மிகுந்தது—சவ மொழியிலும் பண்பட்டது'

தமிழ் மொழி, கலை, பண்பு குறித்து பிரெஞ்சுப் பேராசிரியர் விளக்கம்

பிரேஞ்சு கல்லூரிப் பேராசிரியரான ஜே. பிலியோஜாத் என்பார், சென்னை தமிழ்க் கலை மன்றத்தின் கூட்டமொன்றில், திரு. ரா. பி. சேது அவர்கள் தலைமையில், 'தமிழும்—சவ மொழியும்' என்ற தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளதாவது:—

"ஐரோப்பாவில் இந்திய இலக்கியங்களைப் பற்றிய அறிவு முதன்முதலாகத் தென்னிந்தியாவிலிருந்துதான் — திராவிடர்களிடமிருந்துதான் -குறிப்பாக தமிழ், மலையாள மொழி பேசுபவரிடமிருந்துதான் வந்தது;

'ஐரோப்பிய கிறித்தவ 'மிஷனரி'கள் எல்லாம் முக்கியமாக தமிழ் நாட்டில்தான் வேலை செய்தன; அவைகள், சவ மொழி நூல்களைக்கூட—தமிழ், மலையாளம், தெலுங்கு மொழிகள் மூலமாகத்தான் கற்றுக் கொண்டனர்;

"பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுக் காலத்தில், சவ மொழியினுடையதைக் காட்டிலும் தமிழ் மொழியின் தத்துவம் பெருமளவு முன்னேறியிருந்தது;

', பெஸ்கி எழுதிய இலக்கண நூல் இப்போது கூட—எப்போதும் உபயோகப்படக் கூடிய ஒரு நூலாகும்;

"பெஸ்கி, டி பூஜெஸ் ஆகியோரது மிகண்டுப் பணி, புதுவை 'மிஷனி'ல் உள்ள பிரெஞ்சு—தமிழ் அகராதி மூலம் உபயோகத்திலிருக்கிறது;

"இதற்கு மாறாக, பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்பு தயாரிக்கப்பட்ட சவமொழி இலக்கண, அகராதி நூல்கள், சரித்திர ரீதியன்றியில் வேறெவ்வகையாலும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கவில்லை;

"பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில்தான் நிலைமை மாறிற்று.

"இந்தியாவிலிருந்த ஐரோப்பியர்களின் வேலை முகாம், அரசியல் காரணங்களுக்காக தென்னாட்டிலிருந்து கல்கத்தாவிற்குச் சென்றது; இங்கு சவமொழிதான் பிரதானமாக இருந்தது; அகில இந்தியாவின் பொதுவான இலக்கிய மொழியாக இருந்ததினால் ஐரோப்பிய பண்டிதர்கள் இந்தியப் பண்பாட்டினைப் புரிந்துகொள்வதற்கான அடிப்படைச் சாதனமாக—தங்கள் முயற்சியை எல்லாம் அப்பக்கம் திருப்பினர்; மேலும் வங்காளத்தில், திராவிடக் கருத்துக்களைப் பற்றி அறிந்துகொள்வது இயலாத ஒன்றாயிருந்தது. திராவிட மொழிகள் புறக்கணிக்கப்பட்டதற்குரிய மற்றொரு காரணம், இதைப்போல தற்செயலான ஒன்றல்ல;

"இனக் கொள்கைகள் படிப்படியாகத் தலை தூக்கியதின் விளைவுதான் அந்த மற்றொரு காரணம்;

"மனித சமூகத்தின் துவக்கக் காலத் தெளிவு குறித்த எண்ணங்கள் முதலில் முகிழ்த்தன; சவ மொழியைப் போன்ற மிகப் பழைமையான கவிதை நய மொழியே அத்தகு ஒரு துவக்க காலத் தெளிவினைப் பிரதிபலிக்கத் தகுதியுடையதெனக் கருதப்பட்டது;

"இதற்கெல்லாம் மேலாக இந்தியர்களில் ஒரு பகுதியினர், ஐரோப்பியர்கள் ஆகியோரின் பொதுவான மூதாதைகளைக் கொண்ட மக்களின் உண்மையான மொழியின், தப்பிப் பிழைத்த தெளிவான உருவமாக, சவமொழி கருதப்பட்டது; அது ஒரு ஆரிய மொழி—'மேலானவர்கள்' என்ற ஆரியர்களின் மொழி;

"இந்தியாவின் இதர மொழிகள் எல்லாம், சவமொழி அல்லது வேறு அன்னிய மொழிகளின் சிதைந்த உருவங்களாகவே இருந்தன; சவமொழி அல்லது, ஆரிய ஆதிக்கத்திற்குட்பட்ட பண்பாடு கொண்ட ஆரியரல்லாத அடிமைகளின் மொழிகளாயிருந்தன அவை;

"தமிழ் மொழி, இந்தியாவின் தேசிய மொழிகளுள் ஒன்றாக இருந்த ஒன்று—என்று, சில பழங்கால, இந்தியத் தத்துவ வாதிகளால் கருதப்படுகிறது.

"இந்திய மொழிகள் மூன்று வரிசையாகப் பிரிக்கப்படுகின்றன—பழங்கால இந்திய அல்லது சவமொழி; இடைக்கால இந்திய அல்லது பிரகிருதங்கள்; தேசிய மொழிகள் அல்லது நவீன கால மொழிகள்;

"இந்தக் கணிதம், இந்தோ—ஆரிய சமூகத்திற்கு ஓரளவு பொருந்தக்கூடிய சரியான ஒன்றாகும்; ஆனால், திராவிடச் சமுதாயத்திற்கு—குறிப்பாகத் தமிழர்களுக்குப் பொருந்தக் கூடியதல்ல;

"தமிழ் மொழி அதன் வளர்ச்சியுடன் இன்றுவரையில் பாதுகாக்கப்படும் ஒரு பழமையான மொழியாகும்; இது — சவ மொழி, பிரகிருதங்கள், இந்தோ—ஆரிய தேசீய மொழிகள் ஆகியவற்றிற்குச் சமமான ஒன்றாக அதன் சரித்திர கால முழுவதும் இருந்துவருகிறது; இதற்குக் காரணம், அதன் இயற்கைத் தன்மையில் தமிழ் மொழி, இந்தோ - ஆரிய மொழிகளிலிருந்து வேறுபட்ட — அன்னியமான ஒரு மொழியாக இருப்பது மட்டுமின்றி, இந்தோ—ஆரிய மொழிகளின் இலக்கியங்களுக்குப் பக்கத்திலேயே—தமிழ் மொழிக்கென 'சுதந்திரமான' இலக்கியங்கள் இருந்தனவென்பதுமாகும்;

"ஏறத்தாழ இந்தியாவின் இதர இலக்கியங்கள் எல்லாம் சவமொழி இலக்கியங்களுடனேயே வளர்க்கப்பட்டன; ஆனால், சுதந்திரமாகத் தனித்தியங்கும் தன்மையின்றி என்பது மட்டுமின்றி, சவமொழி இலக்கியங்களைச் சார்ந்திருக்கிற இலக்கியங்களாகவே இருந்தன. மேலும், இந்த இலக்கியங்கள் எல்லாம் ஒரு முழு கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் சாதனங்களாக—கண்ணாடிகளாக இருக்கவில்லை. இவையெல்லாம், மூல கவிதைகளை உடையனவாயிருக்கின்றன; ஆனால், எல்லா வகை அறிவையும் பற்றிய புத்தகங்களாக இல்லை; இந்தப் புத்தகங்கள் எல்லாம் சவமொழிப் புத்தகங்களாயிருக்கின்றன—அல்லது, சவமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டனவாயுள்ளன.

"இதற்கு மாறாக, தமிழ் இலக்கியம், ஒரு பண்பாட்டைப் பிரதிபலிக்கும் முழுத்தன்மை பெற்றதாக இருக்கின்றது;

"சவமொழியிலிருந்து தமிழ் மொழியில் சிலவற்றை மொழி பெயர்த்தவர்கள் கூட, பழங்காலத்தில், சவமொழி மூலத்தில் தெளிவான அறிவு பெற்றிருந்தனர்; விஷயங்களை தங்களிஷ்டப்படி தொகுக்கும் ஆற்றல் படைத்தவர்களாயிருந்திருக்கின்றனர்."

சந்திரனுக்குச் செல்லும் காலம்

விஞ்ஞானியின் நம்பிக்கை

ஹாலிவுட் (கலிபோர்னியா)— 'மின்னணுக் (எலக்ட்ரான்) காலத்தைத் தோற்றுவித்த விஞ்ஞானி, தமது காலத்திலேயே மனிதன் சந்திரனுக்குப் போய்ச் சேர்வான்,' என்று தன்னுடைய 82-வது பிறந்த நாளில், விஞ்ஞானி ஒருவர் கூறியுள்ளார்.

கழகச் செய்திகள்

காட்டூரில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

28—8—55 மாலை 6½ மணிக்கு, தோழர் கே. ஆர். சீரங்கன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் தி. மு. கழகக் கொள்கைகள், திராவிட நாடு பிரிவினையின் அவசியம், ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிப்பட்டதைக் குறித்துப் பேசியபின், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் வடநாட்டு ஏகாதிபத்தியம் ஒழியவேண்டியதின் அவசியம் பற்றியும், டில்லி ஆட்சி செய்துவரும் வஞ்சகம் குறித்தும், மத்திய ஆட்சியாளர் நமக்கு ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக சலுகை கொடுத்தாலும் கூட, நாம் முன்னேற முடியாது என்றும், விரைவில் நாட்டுப் பிரிவினைக்கான போராட்டங்கள் அண்மையில் நடைபெற இருக்கும் மாநில மாநாட்டில் உருவாகப் போகிறது என்றும் விளக்கிப் பேசினர்.

சென்னை 44-வது வட்ட தி. மு. கழகம்

30—8—55 இரவு 9 மணிக்கு, நடைபெற்ற கிளைக் கழக அவசரக் குழுக் கூட்டத்தில், தோழர் பி. வி. ஆனந்தன் அவர்களை செயற் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தும், தோழர் என். கே. மூர்த்தியின் விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டும், தோழர் சி. குப்புசாமி அவர்களை பொருளாளராகத் தேர்ந்தெடுத்தும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

தளவாய்புரம் தி. மு. கழகம்

26—8—55 இரவு 9 மணிக்கு, கழகக் கட்டிடத்தில், தோழர் பி. முத்துக்குமரன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், கோவா விடுதலைப் போரில் உயிரிழந்த தியாகிகளுக்கு வீரவணக்கம் தெரிவித்தும், இராமநாதபுரம் மாவட்டத்தில் அண்ணாவின் சுற்றுப் பிரயாணம் நிகழ ஆவன செய்யுமாறு மாவட்டச் செயலாளரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கும்பகோணம் நகர தி.மு. கழகம்

28—8—55 காலை 10 மணிக்கு, நகர தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் தோழர் கே. கே. நீலமேகம் இல்லத்தில் தோழர் கோ. நாராயணசாமி தலைமையில் நடைபெற்றபோது திராவிட நாடு பிரிவினை நாள் விழா 18—9—55-ல் கொண்டாடுவதுடன், நகரிலுள்ள எல்லா வட்டாரங்களிலும் கழகக் கொடி ஏற்றுவது என்றும், மற்றும் இரண்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இலக்குமணபுரி-பெங்களூர் தி. மு. கழகம்

28—8—55 அன்று, ஜி. எஸ் அண்ணியப்பன் தலைமையில் கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. 25—9—55ல் கழக ஆண்டுவிழா நடத்துவதென்றும், கழக வளர்ச்சிக்காக சிறப்புச் சொற்பொழிவு நடத்தி, நன்கொடை திரட்டுவதெனவும், தோழர் ஏ. டி. பிரான்சிஸ் அவர்களை கைது செய்து சிறையில் தள்ளிய மைசூர் சர்க்காரைக் கண்டித்தும், கோவா விடுதலைக்காக உயிர்நீத்த வீரர்களுக்கு அனுதாபமும், தோழர் ஜி பராங்குசம் அவர்களின் தந்தையார்; சென்னை மைதீன் ஆகியோர் இயற்கையெய்தியதற்கு வருத்தம் தெரிவித்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சென்னை 6-வது வட்ட தி. மு. கழகம்

30—8—55 மாலை 7 மணிக்கு, பெரம்பூர் வடிவேலுமுதலி தெரு, எண் 10 இல்லத்தில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில், 17-9-55 மாலை 6 மணிக்கு, பெரம்பூர் ஏரி மைதானத்தில், திராவிட நாடு பிரிவினை நாள் விழாவையும், தி. மு. கழக ஆண்டு விழாவையும் நடத்துவதென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், கோவா கண்டன, அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேறின.

ஆவடி தி. மு. கழகம்

27—8—55 மாலை 6 மணியளவில் தோழர் மு. நாகராசன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், கோவா கண்டன, அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர், அடுத்த செப்டம்பர் மாதக் கடைசி வாரத்தில், பொதுக் கூட்டம் ஒன்று நடத்துவதென்றும், கூட்ட ஏற்பாடுகளைத் துரிதப்படுத்த தோழர்கள் ஆ. ரா. முத்து, வி மதுரை ஆகியோரை நியமித்தும் முடிவு செய்யப்பட்டது.

அம்மாசத்திரம் தி. மு. க.

30—8—55 மாலை 6½ மணிக்கு: கழகச் சார்பில் பொதுக்கூட்டம் தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், கே. ஆர். இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கழகப் பணிமனையில் பொதுச் செயலாளர் அவர்கள் இயக்கக் கொடியை ஏற்றியதுடன், அன்று மாலை 5½ மணிக்கு திருபுவனம் சென்று, தேரடியில் இயக்கக் கொடியை ஏற்றினர்.

மற்றும், நடுவக்கரை, அம்மாசத்திரம் இவற்றின் முக்கிய இடங்களில் தோழர் கோ. நாராயணசாமி இயக்கக்கொடியைப் பறக்கவிட்டார்.

கும்மிடிபூண்டி தி. மு. க.

28—8—55 மாலை 5 மணிக்கு நடைபெற்ற கிளைக் கழகச் செயற் குழு கூட்டத்தில் தோழர் செ. பலராமன் விலகல் கடிதத்தைத் திருப்பெற்றுக்கொள்ளவும், கும்மிடி பூண்டி தி. மு கழகச் சார்பில் கவரைப்பேட்டையில் செப்டம்பர் இறுதியில் ஓர் பொதுக்கூட்டம் நடத்துவதெனவும், துவக்கத்திலிருந்தே செயற் குழு உறுப்பினராக இருந்தும் சந்தா செலுத்தாதவரை குழுவிலிருந்து விலக்கியும், மற்றும் சிலரை செயற் குழுவில் சேர்த்துக் கொண்டும், கோவா அறப் போராட்டத்தில் உயிர் நீத்த தோழர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பூவிருந்தவல்லி தி மு. க.

31—8—55 இரவு 9 மணிக்கு, கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெற்றபோது, கோவா கண்டன, அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், இத்திங்களில் திராவிட நாடு பிரிவினை வாரப் பொதுக்கூட்டம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சிறுகளப்பூர் தி. மு. கழகம்

26—8—55 அன்று ஊராண்மைக் கழக அலுவலகத்தில் தோழர் ம தங்கையா தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், தோழர் ஜி பராங்குசம் அவர்களின் தந்தையார் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்தும், கோவா சர்க்காரின் வெறிச் செயலைக் கண்டித்தும், உயிர் நீத்த வீரர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வாணியம்பாடியில் தி.மு.க. பொதுக்கூட்டம்

28—8—55 மாலை 6 மணிக்கு, தோழர் கே. பி. சாமிநாதன் தலைமையில் நடைபெற்ற தி மு கழகப் பொதுக்கூட்டத்தில், ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்தும், திராவிட நாடு பிரிய வேண்டியதின் காரணத்தை விளக்கியும், கோவாவில் நடந்த அடக்குமுறையைக் கண்டித்தும் தோழர்கள் என். வி. நடராசன், சி. பி. சிற்றரசு, வி. என். தத்தப்பன் ஆகியோர் பேசினர்.

இராசிபுரம் வட்டக் குழு அமைப்பு

28—8—55 பிற்பகல் 3-30 மணிக்கு, மாவட்டச் செயலாளர் தோழர் ஜி பி. சோமசுந்தரம் தலைமையில் பி. சின்னண்ணன் மாளிகையில் தோழர் இ இருசப்பனைச் செயலாளராகக் கொண்ட வட்டக் குழு அமைக்கப்பட்டது.

கல்லுக்குழி தி. மு. கழகம்

31—8—55 மாலை 6 மணியளவில், கழகப் பணிமனையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் கோவா விடுதலைப் போரில் உயிர் துறந்தவர்களுக்கும், தோழர் ஜி பராங்குசம் தந்தையார் இயற்கை எய்தியமைக்கும் அனுதாபம் தெரிவித்துக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. செப்டம்பர் 17-ம் நாளிலிருந்து ஒருவாரத்திற்குள் திராவிட நாடு பிரிவினை நாள் விழாப் பொதுக் கூட்டம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆலந்தூர் தி. மு. கழகம்

27—8—55 இரவு 10 மணிக்கு, கழக இல்லத்தில் தோழர் மு. தங்கவேலு தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், சென்ற ஜூலை திங்கள் வரவு—செலவு கணக்குகள் யாவும் ஒப்புக்கொள்ளப்பட்டும், தோழர் வி. பாலகிருட்டிணனை செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தும் முடிவு செய்யப்பட்டதுடன், கோவா கண்டன அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சென்னிமலை தி. மு. க.

26—8—55 இரவு கழகப் பணிமனையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், கோவா விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர்களைப் பாராட்டியும், போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டும், போர்ச்சுகீசிய சர்க்காரின் அடக்குமுறை வெறிச் செயல்களைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குன்றத்தூர் தி. மு. க.

29—8—55 இரவு 7½ மணிக்கு நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கோவா அட்டூழியங்களைக் கண்டித்தும், உயிரிழந்த வீரர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் 5 நிமிடம் மௌனம் மேற்கொள்ளப்பட்டது. பின்னர், தி. மு. கழக ஆண்டுவிழாவும், திராவிட நாட்டுப் பிரிவினை வாரமும் கொண்டாடுவதற்காக செப். திங்கள் 17 முதல் 23-ந் தேதிக்குள் பொதுக் கூட்டம் நடத்துவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

பம்பாய்-தாராவி தி. மு. க. துணைத் தேர்தல்

பம்பாய் தி. மு. கழக தாராவி கிளையின் துணைத் தேர்தல் 28—8—55 மாலை 7 மணியளவில் 'திராவிடரக'த்தில் தேர்தல் அதிகாரி தோழர் எஸ் வள்ளிநாயகம் தலைமையில் நடைபெற்றது. துணைச் செயலாளராகத் தோழர் சு தங்கவேலன் அவர்களும், பொருளாளராகத் தோழர் எம். எஸ் கணபதி அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

'நகர மன்றங்களில் கட்சி வேறுபாடு தேவையா?'

புதுக்கோட்டை நகர சபை வரவேற்பில் பொதுச்செயலாளர் கேள்வி

28—8—55 மாலை 3 மணிக்கு புதுக்கோட்டை நகர சபையினர் தமக்களித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"இந்த வரவேற்பு எனக்கு மட்டும் உரியதென்று கொள்ளாமல் எனது இயக்கத்தைப் பாராட்டியதாகவே கருதுகிறேன். காலஞ்சென்ற திரு. வி. க. அவர்கள், 'எவ்வளவு கருத்து வேற்றுமை நம்மிடையே இருந்தபோதிலும், ஒன்றி வாழும் பண்பு வளர வேண்டும்,' என்று அடிக்கடி கூறுவார்; அந்தப் பண்பாடு நம்மிடையே வளரவேண்டும். வண்டிக்காரன், வண்டியில் ஏறி உட்கார்ந்த உடனே மாடு சரியாக இழுத்துச் செல்வதற்காக அதை ஒரு தட்டு தட்டுகிறான்; அது போலவே, குதிரைச் சவாரி செய்கின்றவனும் அதன் மீதும் ஏறியவுடனே சவுக்கடி கொடுக்கிறான்; அந்தச் சவுக்கடி போன்றதாகவே எனக்களிக்கப்பட்ட வரவேற்பையும் கருதுகிறேன்.

"நகராட்சி மன்றங்களுக்கும் மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டும்; மக்கள் தாங்களே நகர மன்றத்தில் பேசுவதற்குப் பதிலாக, சிலரை நியமித்து, அவர்களுக்குத் தங்கள் வாக்குரிமைகளைத் தந்து, 'நீ சென்று எங்களுக்குப் பதிலாக அங்கே பேசு' என்று அனுப்பிய இடம்தான் நகர் மன்றம்; மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் திறமைசாலிகளாகவும், அறிவாற்றல் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்

"சிற்றூர் மன்றம், பேரூர் மன்றம், நகர மன்றம், மாவட்ட ஆட்சி மன்றம் — முதலிய மன்றங்கள் யாவும், செய்து வைக்கப்பட்ட சட்டங்களை நிறைவேற்றுவதற்குரிய இடங்களே; ஆனால், சட்ட மன்றங்களில், கட்சிகள், தாங்கள் கொண்டுள்ள கருத்துக்களை சட்டமாக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அடிப்படைக் கொள்கைகளை சட்டங்களாக நிறைவேற்றும் இடம் சட்ட மன்றங்களும், பாராளுமன்றங்களுமாகும்; ஆனால், சிற்றூர், பேரூர், நகராட்சி, மாவட்ட ஆட்சி மன்றங்கள் ஆகியவற்றின் வேலை, சட்ட பாராளுமன்றங்களால் செய்து வைக்கப்பட்ட சட்டங்களை நிறைவேற்றுவதே;

"நகரத்திற்கு வசதி செய்து தருவது அவற்றின் வேலை; கொசுக்கள் பரவாமல் தடுக்க வேண்டுமென்றால் அதற்குக் கட்சி வேறுபாடு வேண்டியதில்லை. 'காங்கிரஸ் கொசு—கம்யூனிஸ்டு கொசு—கழகக் கொசு—லீக் கொசு' என்று வேறுபாடில்லை; ஆகையால், எல்லாக் கட்சிக்காரர்களுமே இந்த திட்டத்தை கட்சி வேறுபாடின்றி ஏற்றுக்கொள்வார்கள்; அதுபோலவே விளக்குப் போடும் திட்டம் கொண்டு வந்தால் எல்லோருமே ஒப்புக்கொள்வர்; ஏனென்றால், விளக்குகளில், 'காங்கிரஸ் விளக்கு — கம்யூனிஸ்டு விளக்கு—கழக விளக்கு—லீக் விளக்கு' என்று வேறுபாடில்லை. ஆகவே, கட்சி வேறுபாடின்றி நகரசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

"'இதனை இதனால் இவன்
முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'

என்ற வள்ளுவர் கருத்துப்படி, திறமைசாலிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

"நகர சபையில் ஒரு பிரச்சினையைப் பற்றி கட்சியாகப் பிரிந்து விவாதிக்க வேண்டுமே தவிர, முதலிலேயே கட்சியாகப் பிரிந்து தேர்தலில் நின்று வரக்கூடாது; அவ்வாறு முதலிலேயே வேற்றுமை ஏற்பட்டால் ஒருவருக்குள்ள மனமாச்சரியம், கண் சிவப்பு கடைசி வரை இருக்கும்; நகர மன்றத்தின் வேலை ஒழுங்காக நடைபெறாது; ஊரிலே செல்வாக்குடையவர்கள் இருந்தால் அவர்களுடைய பொருளை நகரத்திற்குப் பயன்படும்படி தூண்டலாம்; பள்ளிக்கூடத்திற்கு—கல்லூரிக்கு—மருத்துவ விடுதிக்குச் செலவு செய்யும்படி தூண்டலாம்; இதுபோன்ற முறையிலே நகரசபை வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம்;

"'செய்தக்க அல்ல செயக்கெடும்
செய்தக்க
செய்யாமை யானும் கெடும்'

என்பதுபோல, நகர மன்றங்கள் செய்ய வேண்டியவைகளைச் செய்யாது விடுவதினாலும் கேடுதல் ஏற்படும்; ஆகவே நகரமன்றங்கள் நன்கு பணிபுரிய வேண்டும்."

கல்லூரி ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள்

பல்கலைக் கழக மானியக் குழு சிபாரிசு

மைசூர், செப். 4—

பல்கலைக் கழக மானியக் குழுவின் 15-வது கூட்டம் நடைபெற்றபோது, பல்கலைக் கழக ஆசிரியர் சம்பள விகிதங்களை மாற்றியமைக்க சிபாரிசு செய்திருப்பதாக மைசூர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் வி. எல். டி'சௌசா தகவல் தந்திருக்கிறார்

இதுகுறித்து மத்திய, மாநில சர்க்கார்களுக்கு, குழு எழுதியுள்ளதாம்.

சிபாரிசின்படி, விரிவுரையாளர்களுக்கு ரூ 250-20-800 என்றும், ஆய்வாளர்களுக்கு ரூ 500-25-800 என்றும், பேராசிரியர்களுக்கு ரூ. 800-50-1250 என்றும், மற்றப் பிரிவு ஆசிரியர்களுக்குக் குறைந்த பட்சம் ரூ. 150 இருக்கவேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

புதிய சம்பள விகிதங்கள் 1956-ம் ஆண்டு முதல் அமுலுக்கு வரவேண்டும் என்றும், புதிய சம்பள விகிதங்களை அமுல் நடத்த சர்வகலாசாலைகளுக்கு எவ்வளவு செலவு ஆகும் என்று கேட்கக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் டி'சௌசா தெரிவித்திருக்கிறார்.

பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள கல்லூரி ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் குறித்தும் சில பிரரேபணைகளை குழு, வகுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கல்லூரி தலைவர்களுக்கு ரூ. 600 முதல் 800 வரையும், இலாகா தலைமை ஆசிரியர்களுக்கு ரூ. 400 முதல் 700 வரையும், முதல் பிரிவு ஆசிரியர்களுக்கு ரூ. 300 முதல் 500 வரையும், 2-வது பிரிவு ஆசிரியர்களுக்கு ரூ 200 முதல் 400 வரையும் சம்பள விகிதங்கள் சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாக, டி'சௌசா தெரிவித்திருக்கிறார்.

பஞ்சாயத்துப் போர்டு தேர்தல்

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் ஆரியபாளையம் தி. மு. கழகக் கிளையின் செயலாளர் தோழர் எம். நாகரத்தினம் அவர்கள், 30 8-55ல் நடைபெற்ற மேற்படியூர் பஞ்சாயத்து போர்டு தேர்தலில் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் தி. மு கழக உறுப்பினர் தோழர் முத்துசாமி, மற்றும் தி. மு. கழக அனுதாபிகளான தோழர்கள் மாணிக்கம், துரைசாமி, முத்து, தங்கவேலு ஆகியோரும் பஞ்சாயத்துக் குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(ந.-நி.)

'ஆண் ஒருவர் நியமிக்கப்பட்டதேன்'

'அந்தக் காலம் மலையேறிவிட்டது'

பெண்கள் கல்லூரித் தலைமையர் பற்றி மக்கள் சபையில் கேள்வி

புதுடில்லி, செப். 5—

புதுடில்லியில் உள்ள திருமதி ஹார்டிஞ்ச் பெண்கள் மருத்துவக் கல்லூரிக்குத் தலைமையாராக ஆண் ஒருவர் நியமிக்கப்பட்டதை ஒட்டி மக்கள் சபையில் பல கேள்விகள் கேட்கப்பட்டன.

'பெண்கள் கல்லூரித் தலைமையாராகப்பெண் ஒருவர் நியமிக்கப்படாமல், ஆண் ஏன் நியமிக்கப்பட்டார்?' என்று கேட்கப்பட்ட கேள்விக்கு சுகாதார மந்திரி இராஜகுமாரி அமிர்த கௌரி, 'இரண்டு முறை விளம்பரம் செய்தும், பெண் ஒருவர் கிடைக்காததாலேயே ஆண் ஒருவர் நியமிக்கப்பட்டார்—பெண் என்பதற்காகவே ஒருவருக்கு வேலை தரும் நாட்கள் மலையேறிவிட்டன,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், நியமிக்கப்பட்டுள்ள தலைமையாருக்கு 55 வயது ஆவதாகவும், அவர் எவ்வளவு பட்டங்கள் பெற்றவர் என்பதையும் விளக்கிக் கூறியிருக்கிறார்.

யானை பிடிக்கப் போகிறார்களாம்!

வடகிழக்கு எல்லைப் பகுதியிலுள்ள காடுகளில், இவ்வாண்டில் 116 யானைகள் பிடிக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் யானைகளின் குடும்பப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த உதவுகிறதென்றும், சர்க்காருக்கும் சிறிது வருமானம் கிடைக்கிறதென்றும், மக்கள் சபையில் பிரதமர் நேரு தெரிவித்துள்ளார்.

'நடமாடும்' வானொலி நிலையம்

புதுடில்லி, செப். 4—

சென்னை வானொலி நிலைய அபிவிருத்தி திட்டத்தின்கீழ், ஆவடியில், புதிய 20 கிலோவாட் மத்திய அலை 'டிரான்ஸ் மீட்டர்' இந்த ஆண்டு இறுதிக்குள் இயங்க ஆரம்பிக்கும் என்று தெரிகிறது.

இதற்கான கட்டிடம் ஏற்கனவே கட்டியாகிவிட்டது 'டிரான்ஸ் மீட்டர்' பொருத்தும் வேலை சீக்கிரத்தில் ஆரம்பமாகும்: அதற்கு ரூ. 10 இலட்சம் செலவாகும் என்று தெரிகிறது.

ஆவடியில் 100 கிலோவாட் குறுகிய அலை 'டிரான்ஸ் மீட்டர்' ஒன்றை ஏற்படுத்துவதற்கான சாதனங்கள் வந்து சேர்ந்துவிட்டன; இதற்கு ரூ. 35 இலட்சம் செலவாகும் என்று தெரிகிறது.

உள் பிரதேசங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்புவதற்கு 'நடமாடும்' வானொலி நிலையங்கள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன.

நவீன ஒலிப்பதிவு செய்யும் வசதிகளுடன் மேலும் 7 'ஸ்டுடியோக்கள்' கட்டப்படவிருக்கின்றன.

காரணம் என்ன?

திருச்சி மாவட்டத்தில், தமிழிலேயே அரசாங்கக் காரியாலய நிர்வாகங்கள் நடைபெறுவது திருப்திகரமாக இல்லையென்று கூறப்பட்டதல்லவா? இதற்குக் காரணம், ஆங்கில வார்த்தைகளுக்குச் சரியான தமிழ் வார்த்தைகளும், தமிழில் 'டைப்' அடிக்கத் தெரிந்தவர்களும் கிடைக்காததுதானாம்! இதனாலேயே தமிழில் கடிதப் போக்குவரத்துக்கள் நடத்துவது தடையாக உள்ளதாம்!

கைக்குத்தல் அரிசி அபிவிருத்திக்கு.....

சென்னைக்கு மானியமாம்!

மாநிலங்களுக்கு மத்திய சர்க்கார் அளித்துள்ள நிதி உதவிகள்

இந்திய சர்க்கார், கிராமத் தொழில்கள், கதர் உற்பத்தி, பட்டு உற்பத்தித் தொழில்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக அகில இந்திய காதி கிராமத் தொழில்கள் போர்டுக்கும், பல்வேறு மாநிலங்களுக்கும் சகாயத் தொகையாகவும், கடன்உதவியாகவும் மேற்கொண்டு ரூ 30 லட்சம் வழங்கி இருக்கின்றனர்.

கதர் உற்பத்தி—விற்பனை ஆகியவற்றுக்காக இதற்கு முன்னர் வழங்கிய நிரந்தரக் கடன் தொகையான ரூ. 1,38,00,000 இப்பொழுது ரூ. 1,50,00,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. நாசிக் வித்தியாலயாவில் கதர் உற்பத்தியில் பயிற்சி அளிப்பதற்கான திட்டமொன்றுக்கு ரூ. 12,200 செலவிட போர்டுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

வெல்லம், வெல்லச் சர்க்கரை உற்பத்தித் தொழிலின் அபிவிருத்திக்காக அ. இ காதி-கிராமத் தொழில்கள் போர்டுக்கும், 12 மாநிலங்களுக்கும் மொத்தம் ரூ. 7,96,595 வழங்கப்பட்டிருக்கிறது; இதில் போர்டுக்கு ரூ. 1,88,000; சென்னைக்கு ரூ 60,900; ஆந்திராவுக்கு ரூ 60,900; மைசூருக்கு ரூ. 25,375 கிடைக்கும்.

மற்ற மாநிலங்களில் முறையே பம்பாய்க்கு ரூ. 99,520; பஞ்சாபுக்கு ரூ 80,750; ஐதராபாத்துக்கு ரூ 43,350; பீகாருக்கு ரூ. 39,850; மேற்கு வங்காளத்துக்கு ரூ. 30,375; ஒரிசாவுக்கு ரூ. 25,375; அசாமுக்கு ரூ. 25,375; மத்தியப் பிரதேசத்துக்கு ரூ 15,825 கிடைக்கும்.

கைக்குத்தல் அரிசி உற்பத்தித் தொழிலின் அபிவிருத்திக்காக சென்னைக்கு ரூ 6,300; மைசூருக்கு ரூ. 5,000 சகாயத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது.

கிராம மட்பாண்டத் தொழிலின் அபிவிருத்திக்காக ஆந்திராவுக்குக் கடனாக ரூ. 2,225 வழங்கப்பட்டிருக்கிறது.

மாவு அரைக்கும் இயந்திரங்களின் அபிவிருத்திக்காக, அஜ்மீருக்குச் சகாயத் தொகையாக ரூ 3,300 வழங்கப்பட்டிருக்கிறது

பட்டு உற்பத்தித் தொழிலின் அபிவிருத்திக்காக மைசூருக்குச் சகாயத் தொகையாக ரூ. 3,20,000 வழங்கப்பட்டிருக்கிறது. இத்தொகை, பட்டுப்பூச்சி வளர்ப்பு நிலையங்களை ஏற்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும்.

கைக்குத்தல் அரிசி உற்பத்தித் தொழிலின் அபிவிருத்திக்காக, ஐதராபாத்துக்குக் கடனாக ரூ. 2,53,125-ம் சகாயத் தொகையாக ரூ. 1,40,525-ம் வழங்கப்பட்டிருக்கிறது. மற்றும், மாவு அரைக்கும் இயந்திரங்களின் சீரமைப்புக்காக அந்த மாநிலத்துக்கு சகாயத் தொகையாக ரூ 22,500 வழங்கப்பட்டிருக்கிறது

கிராமத் தொழில்களின் அபிவிருத்திக்காக, மேற்கு வங்காளத்துக்குச் சகாயத் தொகையாக ரூ. 99,350-ம் கடனாக ரூ 73,500-மும், ஒரிசாவுக்குச் சகாயத் தொகையாக ரூ. 66,770-ம் கடனாக ரூ. 4,000-மும் வழங்கப்பட்டிருக்கிறது.

காட்டிக் கொடுக்கிறதாம்!

'கோவா பற்றிய காங்கிரசின் முடிவு, நாட்டைக் காட்டிக் கொடுப்பதாயுள்ளது' என்று டில்லி இந்து மகாசபை காரியதரிசி கூறியுள்ளார்.

சட்டக் கல்லூரியில் அண்ணதுரை

★

சென்னை சட்டக் கல்லூரித் தமிழ் மன்றத் துவக்க விழா, 7—9—55 மாலை 4½ மணிக்கு மாணவர் தலைவர் தோழர் கி.வ.ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெறும். தோழர் நாரண துரைக்கண்ணன் மன்றத்தைத் திறந்து வைப்பார். தோழர் சி. என். அண்ணதுரை விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

வேலை தேடித் தரும் நிறுவனங்கள்

அதிகரிக்கவும், திருத்தி அமைக்கவும் திட்டங்கள்

கல்கத்தா, செப். 5—

இப்போதுள்ள வேலை தேடித் தரும் நிறுவனங்களைத் திருத்தி அமைப்பதின் மூலம், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்படி எழக்கூடிய புதிய பொறுப்புகளைத் தெரிந்து செயலாற்றச் செய்வதற்காக மாநில அரசாங்கங்களுக்கு மத்திய சர்க்கார் விரிவான திட்டம் ஒன்றினை அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

அதிகமான வேலை தேடித் தரும் நிறுவனங்களை ஏற்படுத்துதல், மாணவர்களுக்கும், இதரர்களுக்கும் பயிற்சியளிக்கும் இளைஞர் வேலைப் பயிற்சி நிலையம் ஒன்று அமைத்தல், வேலை தேடிவருபவர்களின் நோக்கங்களையும், வேலைத் திறனையும் அறிந்துகொள்வதற்காக வேலை தேடித்தரும் நிறுவனங்களில் பரீட்சைகள் நடத்துதல் முதலியன இந்திய சர்க்காரின் திட்டத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

மாற்றினாலன்றி முடியாதாம்!

'பகல் 1 மணி முதல் 2-30 மணி வரையில் 'கோரம்' இல்லாமலிருந்தால்கூட மக்கள் சபைக் கூட்டம் நடைபெறலாம்' என்ற நடைமுறை விதியை மாற்றினாலன்றி, அம்முறை தொடர்ந்து பின்பற்றப்படும்—என்று, மக்கள் சபைத் தலைவர் மாவ்லங்கர், ஒரு ஒழுங்குப் பிரச்சினை மீது தீர்ப்பளிக்கையில் குறிப்பிட்டார்.

அவசியமானால், இதற்காக ஒரு சட்டம் இயற்றும்படி சர்க்காரைக் கேட்டுக்கொண்டார்.

ஐ. சி. எஸ். அய்யருக்கு அப்பீல் செய்ய அனுமதி

புதுடில்லி, செப். 5—

பஞ்சாப் உயர் நீதிமன்றம் தனக்கு விதித்த இரண்டு ஆண்டு சிறைக்காவல்தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்துகொள்ள முன்னாள் ஐ. சி. எஸ் அதிகாரியான எஸ் ஏ. வெங்கடராமனுக்கு, இந்திய உயர் நீதிமன்றம் விசேட அனுமதி அளித்துள்ளது.

'அரசாங்க அதிகாரியான அவர் மீது வழக்குத் தொடருமுன், குடியரசுத் தலைவரின் அனுமதியைப் பெறுவது அவசியமா?'—என்ற ஒரு பிரச்சினை சம்பந்தமாகவே அப்பீல் செய்வதற்கு அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யோசனை இருக்கிறதாம்!

சென்னை மாநிலத்தில், நான்கு ரக மாடுகளுக்கு, நான்கு புதிய 'பொலி காளை நிலைய'ங்கள் ஆரம்பிப்பதற்கான யோசனை இருக்கிறதென்றும், அதற்கான விசேட 'பொலி நிலைய'ங்கள் இல்லையென்றும் சென்னை சுகாதார அமைச்சர் கூறியுள்ளார்.

மொராக்கோ தலைவர் படுகொலை

கசாபிளாங்கா, செப். 4—

பிரெஞ்சு மந்திரிகள் பலருடன் நட்புறவுவைத்திருந்த மொராக்கோ தேசியத் தலைவரான முகம்மது பாபி பெராடா என்பவர், கொலை செய்யப்பட்டார் என்று தகவல் தரப்படுகிறது.

அவர் தனது வீட்டு வாயிற்படியில் நின்றுகொண்டிருக்கும்போது, இனம் தெரியாத சிலரால் சுட்டு வீழ்த்தப்பட்டதாயும், மருத்துவமனைக்கு எடுத்துச் செல்கையில் அவர் இறந்துபட்டதாயும் கூறப்படுகிறது.

போலீசார் அவர் வீட்டுக்கு விரைந்து சென்றபோது, வாயிற்படியில் சிந்தியிருந்த இரத்தம் கழுவப்பட்டு விட்டிருந்தது என்றும், அவரது குமாரர்களைக் கேட்டபோது, தாங்கள் 'எதையும் பார்க்கவுமில்லை — கேட்கவுமில்லை' என்று கூறினராம்.

மொராக்கோவின் எதிர்காலம் குறித்துப் பாரிசில் பிரெஞ்சுசர்க்காருடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கும் தேசியக் கட்சியில் மிகவும் முக்கியமான தலைவர்களுள் அவர் ஒருவர் என்று கூறப்படுகிறது.

பதினேந்து மாதங்களுக்கு முன்பாக, அவரது உயிருக்கு உலை வைக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு குண்டு வீச்சில், மயிரிழையில் உயிர் தப்பினார் என்பது குறிப்பிடத்தகுந்தது.

முன்னாள் சுல்தானைக் காண விரைகின்றனர்

பாரிஸ், செப். 4—

மொராக்கோவின் முன்னாள் சுல்தானை பென் யூசுபை சந்திப்பதற்காக மொராக்கோ தலைவர்கள் இருவர், பாரிசிலிருந்து மடகாஸ்கர் புறப்பட்டனர்.

மொராக்கோ எதிர்காலம் குறித்து நிர்ணயிப்பதற்காக கடந்த இருவாரமாக நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை குறித்துப் பேசுவதற்காகவே அவர்கள் யூசுபைச் சந்திக்கச் செல்கிறார்களாம்.

கால்நடைகள் இறந்ததின் எதிரொலி

சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடு தரப்படுகிறது

பாடியாலா, செப். 5—

அம்மைப் பால் தயாரிப்பில், அசிரத்தையாக இருந்த காரணத்தால், 735 கால்நடைகள் இறந்து போவதற்குக் காரணமாயிருந்த 'பெப்சு' கால்நடை இலாகாவின் சிப்பந்திகள் அனைவரும் 'சஸ்பெண்டு' செய்யப்பட்ட செய்தி வெளிவந்துள்ளதல்லவா?

இறந்துபோன கால்நடைகளுக்காக, அதன் சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடாக ரூ 1,75,000 அளிப்பதென சர்க்கார் முடிவு செய்துள்ளதாம்.

மேலும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏர் உழவும், 'கவலை' ஓட்டவும் உதவுவதற்கென ரூ. 35,000 அனுமதிக்கப்பட்டுள்ளது; அது மட்டுமின்றி, பாட்டியாலா உதவி கமிஷனர், தக்காவிக் கடன்களாக ரூ. 50,000 விவசாயிகளுக்குத் தருவதற்கு முடிவு செய்திருக்கிறாராம்.

மீண்டும் பரிசீலனை

"ஐ. நா. நடு நிலைமையாளரை ஏற்பதற்குத் தென்னாப்பிரிக்கா மறுத்துவிட்டதைத் தொடர்ந்து தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்சினை மீண்டும் ஐ. நா. பொதுச் சபையின் கூட்டத்தில் பரிசீலனைக்கு வரப்படும்," என்று மக்கள் சபையில் பிரதமர் நேரு தெரிவித்துள்ளார்.

வட ஆப்பிரிக்கர்கள் வளைக்கப்பட்டனர்

பாரிஸ், அரபு பகுதிகளில் திடீர் சோதனை

பிரெஞ்சுப் போலீசார், பாரிசின் சுற்றுப்புறங்களில் அரபுகள் வசிக்கும் பகுதிகளில், திடீரென சோதனையிட்டு, 100 வட ஆப்பிரிக்கர்களைக் கைது செய்து காவலில் வைத்துள்ளனராம்; ஏராளமான ஆயுதங்கள், கடிதங்கள், தஸ்தாவேஜுகள், பணம் ஆகியவற்றையும் அவர்கள் கைப்பற்றினராம்.

அல்ஜீரியாவில் ஆக. 20-ந் தேதியன்று நடைபெற்ற கலவரத்தை யொட்டி விசாரணை நடத்தும் இலாகாவின் வேண்டுகோளின் மீதே இந்தத் திடீர் சோதனையில் போலீசார் இறங்கினராம்!

கைது செய்யப்பட்டுள்ள ஆப்பிரிக்கர்கள் உடனடியாக அல்ஜீரியாவுக்கு மாற்றப்படுவராம்; அங்குள்ள மாஜிஸ்திரேட் இவர்களை விசாரிப்பாராம்!

"வட ஆப்பிரிக்கக் 'கலகக்காரர்'களுடனும், அவர்களைத் தூண்டுகிற வெளிநாட்டுக்காரர்களுடனும் கள்ளத்தனமாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கூட்டுச் சேர்ந்து, பிரான்சில் உள்ள வட ஆப்பிரிக்கர்களிடையே ஒரு இயக்கம் நடத்தத் திட்டமிட்டிருந்தனராம்.

இந்தத் திட்டப்படி அவர்கள் ஆட்சேபகரமான துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல், கடைகளையும், உணவு விடுதிகளையும் பகிஷ்கரித்தல், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அனுதாபம் காட்ட மறுக்கும் வட ஆப்பிரிக்கர்களைத் தாக்குதல், இந்த இயக்கத்திற்கு பயமுறுத்திப் பணம் திரட்டுதல் போன்ற காரியங்களும் இடம் பெற்றிருந்தனவாம்.

பாகிஸ்தானின் புதிய அ. நி. சபையும் செல்லாது?

கராச்சி, செப். 5—

சிந்து சட்டசபை, பழைய அ. நி சபை ஆகியவற்றின் உறுப்பினரிருவர் கூட்டாகச் சேர்ந்து, சிந்து பிரதம நீதிமன்றத்தில், 'பாகிஸ்தானின் புதிய அ. நி. சபையும் செல்லாது' என வழக்குத் தொடர்ந்துள்ளனராம்.

பழைய சட்டசபையை சட்டரீதியான முறையில்கவர்னர்-ஜெனரல் கலைக்காததால், அந்த சட்டசபையே இன்னமும் அதிகாரத்தில் இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாறுதல் கிடையாதாம்!

"போர்ச்சுகலுடன் எங்களுக்குள்ள சாதாரண இராஜதந்திர உறவுகள் நீடித்துக்கொண்டுதான் உள்ளது; எங்கள் நிலைமையில் எவ்வித மாறுதலும் கிடையாது; கோவா சம்பந்தமாகப் பாகிஸ்தானுக்கு எவ்விதக் கண்டனத்தையும் இந்தியா தெரிவிக்கவுமில்லை; இதுபற்றி எங்களை என்ன செய்யச் சொல்லப் போகிறதென்பதும் தெளிவாகவில்லை," என்று, பாக் சர்க்காரின் பிரமுகர் ஒருவர் கூறியுள்ளாராம்.

சைப்ரசுக்கு 'சுதந்திரம்'?

சைப்ரசுக்கு அரசியல் சீர்திருத்தங்கள் வழங்கும் பிரேரபணைகளை பிரிட்டிஷ் மந்திரி சபை அங்கீகரித்துவிட்டதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ

தி.மு.க. ஏழாவது ஆண்டுவிழா கொண்டாடுவீர்